02.04.2025 OS.No.140/2023

வா.சா.1 பெயர்: திருமதி.மணி க/பெ. பழனியப்பன்

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். குறுக்கு விசாரணை: தொடர்ச்சி

2. நான் இவ்வழக்கை யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சகாதேவன் மீது தாக்கல் செய்துள்ளேன். வேறு யாரு மீதும் தாக்கல் செய்யவில்லை. எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1974 ம் வருடத்தில் திருமணம் ஆனது. எனது கணவர் பழனியப்பன் என்பவர் கப்பு என்கிற ராமசாமி என்பவரின் மகன் என்றால் சரிதான். மேற்படி கப்பு என்கிற ராமசாமி எனது தாயாரின் அண்ணன் என்றால் சரிதான். எனது கணவர் பழனியப்பனுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 ஆண் மக்கள் குமார், பழனியப்பன் 2 பெண்கள் சிங்காரம், முருகம்மாள். எனக்கு திருமணம் ஆன போது என்ன வயது என்றால் 13 ஆகும். எனது கணவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நான் எனது கணவர் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். எனது அம்மாவீட்டிற்கு நல்லது கெட்டதிற்கு மட்டும் தான் வந்து செல்வேன் என்றால் சரிதான். கப்பு என்கிற ராமசாமி உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் காவேரியம்மாள் மற்றும் மாணிக்கம் . எனக்கு திருமணம் ஆகி செல்வதற்கு முன்பாகவே கப்பு என்கிற ராமசாமி மற்றும் மாணிக்கம் இருவருக்கும் பாகம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி பாகம் பிரித்தபோது எனது தாயாருக்கு நிலம் எதுவும் கொடுக்கவில்லையென்றால் சரிதான். எனது கணவர் பழனியப்பன் மற்றும் அவரது சகோதரர் குமார் சொத்தினை ராமசாமி பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை போது முருகம்மாள் , சிங்காரம் ஆகியோர்களுக்குசொத்துக்கள் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அரை ஏக்கர் இடம் கொடுத்தார்கள். நான் சொல்வது போன்று முருகம்மாள் , சிங்காரம் ஆகியோர்களுக்கு சொத்துக்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் அது பற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி முருகம்மாள் , சிங்காரம் ஆகியோர்களுக்கு கொடுத்த இடத்தின் சர்வே எண் மற்றும் எங்கே இருந்தது என்ற விவரம் சொல்லமுடியுமா என்றால் எங்கள் ஊரில்தான் கொடுக்கப்பட்டது . சர்வே எண் தெரியாது.

3.எனக்கு 3 மகள்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை என்ன செய்தார் என்றால் விற்று விட்டார். யாருக்கு விற்றார்கள் என்றால் ஊரில் உள்ள நபர்களுக்கு தான் விற்றார்கள். தற்போது மேற்படி இடமானது 3 நபர்களுக்கு கை மாறிவிட்டது. எனது கணவர் சொத்துகளை விற்றபோது எனது மகள்களுக்கு பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்தார்கள். நான் எத்தனை சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் 20 அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் தெரியாது. எத்தனை அட்டவணைகளாக சொத்துக்கள் கேட்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சொத்துகளின் மொத்த விஸ்தீரம் எவ்வளவு என்றால் 7 ஏக்கர் ஆகும். ஒவ்வொரு சர்வே எண்ணுக்கும் எவ்வளவு விஸ்தீரணம் என்று சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியாது. ஆவணத்தில் உள்ளது. எந்த சர்வே எண்ணில் கிணறு உள்ளது என்றால் தெரியாது. பம்பு செட், சர்வீஸ்எண் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்து பக்கம் செல்லவில்லை என்பதால் அது பற்றி விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து என்ன பயிர் உள்ளது என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தென்னை மரம் மற்றும் 2 ஏக்கரில் மாமரம் உள்ளது. எனது வழக்கில் டிஅட்டவணை சொத்தை தவிர மற்ற சொத்துக்களில் தென்னை மரம் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நிலத்தின் பேரில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. தென்னைமரம் வகைப்பாடு பற்றியும் , மாமரத்தின் வயது மற்றும் வகைப்பாடு பற்றியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது வரை மாமரத்திற்கு மருந்து அடிப்பது வளர்ப்பு மற்றும் பராமரிப்புகளை குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றை சகாதேவன் தான் செய்து வருகிறார் என்றால் சரிதான். தென்னை மரங்களில் உள்ள இளநீர் தேங்காய் ஆகியவற்றை சகாதேவனே பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நானும் இளநீர் தேங்காய்களை எடுத்து வருகிறேன். நான் தென்னை மர தேங்காய்களை எடுக்கவில்லை என்றும் சகாதேவன்தான் குத்தகைக்கு விட்டு பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. குத்தகை பணத்தினை சகாதேவன் பயன்படுத்தி வருகிறார் என்றும் எனக்கு மேற்படி இடத்தில் எவ்வித பயன்பாடும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தாவா சொத்தில் உள்ள தென்னை மரத்தை நானும் சகாதேவனும் பயன்படுத்தி வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது வழக்குரையிலும் மற்றும் முதல் விசாரணையிலும் தாவா சொத்து தென்னை மரங்களை பயன்படுத்தி வருவதை பற்றி சொல்லவில்லையென்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சி அட்டவணை சொத்து யார் பெயரில் உள்ளது என்று சொல்லி உள்ளேனா என்றால் பவளகொடி பெயரில் உள்ளது என்று சொல்லி உள்ளேன். பவளகொடி சொத்தினை யாரிடமிருந்து விலைக்கு வாங்கினார் என்றால் சங்கரிடம் இருந்து வாங்கினார். மேற்படி சொத்தை பென்ரஅள்ளி கிராமத்தில் வாழ்ந்து வரும் குட்டி என்கிற கோவிந்தகுமாரர் கப்பு என்கிற ராமசாமி , மேற்படி நபரின் மனைவி லட்சுமியம்மாள் மேற்படி நபரின் குமாரர் பழனியப்பன் ஆகியோரிடம் இருந்து பவளக்கொடி வாங்கி உள்ளதாக கிரைய பத்திரம் உள்ளதா என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் வா.சா.ஆ.4 ஆவணத்தில் கிரைய தொகை ரூ.60,000/- பெற்றுக்கொண்டு ராமசாமி,

லட்சுமியம்மாள், பழனியப்பன் கிரையம் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான்.

5. எனது கணவர் சொத்தினை என்ன செலவிற்காக விற்பனை செய்தார் என்றால் எனது கணவர் கடன் வட்டிக்கு வாங்கி இருந்தார் அதனை கொடுப்பதற்காக விற்பனை செய்து உள்ளார். எனது கணவருக்கு வாய்மொழியாக கிடைத்த பாகத்தினை தான் விற்பனை செய்ததாக பத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான். பவளக்கொடி கிரைய தொகையினை எவ்வாறு கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்திற்கு பவளக்கொடி பெயரில் பட்டா சிட்டா மாற்றம் ஆகி உள்ளது என்றால் சரிதான். டி அட்டவணை சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் சகாதேவனுக்கு சொந்தமானது. சகாதேவன் யாரிடம் இருந்து எப்போது சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் 2015 வருடத்தில் குமார் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். குமார் யார் என்றால் பழனியப்பன் தம்பி ஆவார். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சொத்திற்கு சகாதேவன் பெயரில் பட்டா சிட்டா உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது எங்கே குடியிருந்து வருகிறேன் என்றால் பென்றஅள்ளி ஊரில் வசித்து வருகிறேன். எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் நிலம் எதுவும் இல்லை. ஒரு வீடு உள்ளது. எனது மகள் ஒருவர் அரசு பணியில் உள்ளார் என்றால் சரிதான். நான் எனது மகளுடன் வசித்து வருகிறேன் என்றும் பென்றஅள்ளி கிராமத்தில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகள் பென்றஅள்ளியில் தான் வசித்து வருகிறார். பாரூரில் வேலை செய்து வருகிறார். நான் தாவா 1,2 அயிட்ட சொத்துக்களில் திருமணத்திற்கு பின்னர் சென்று வருவது இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை 2003 வருடத்தில் இறந்தார் என்றால் சரிதான். எனது தந்தை இறப்பிற்கு முன்பாக சொத்தில் பாகம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் 1996 வருடத்தில் இறந்தார். எனக்கு திருமணம் ஆன போது போதிய விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது திருமணத்தின்போது எனக்கு போட்ட நகைகளை எனது மாமியார் வசம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாதான் வைத்து இருந்தார். எனது அப்பா 2003 ம் வருடத்தில் இறந்த பின்னர் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்டேனா என்றால் இல்லை. பாகம் பிரித்து தர சொல்லி ஊரில் உள்ள ஊர்கவுண்டரிடம் கேட்டேனா என்றால் இல்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.